LIBRARY
EASTERN UNIVERSITY, SRI LANKA
26 FEB 2018

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட வெளிவாரிக் கல்விமாணித் தேர்வு– 2009/2010

## மீள்பரீட்சை - வெளிவாரி (2017 –March / April)

## EDU 301 வகுப்பறைக் கற்பித்தலின் திட்டமிடலும் முகாமைத்துவமும்

## (Planning and Management of class room Teaching)

நேரம்: 03மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

1. அ. வகுப்பறையிலும் பாடசாலை மட்டத்திலும் எதிர்பார்க்கப்படும் வினைத்திறனான கலைத்திட்டச் செயற்பாட்டினூடாக அடைய எத்தனிக்கும் 'விசேடகுறிக்கோள்', 'குறிக்கோள்', 'நோக்கம்' ஆகிய பதங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ. "தேசிய இலக்கு அடையப்பட வேண்டுமாயின் அது வகுப்பறையொன்றின் வினைத்திறனான கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டினூடாகவே அடையப்படவேண்டும்". இக்கூற்று எவ்வாறு சாதகமாக அமைகின்றது என்பதனைத் தற்போதைய வகுப்பறைச் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

2. அ. அறிகை ஆட்சிக் கல்விக் குறிக்கோளின் பகுப்பியல்பு பற்றி ஆசிரியர் கொண்டுள்ள அறிவானது, வினாப்பத்திரம் ஒன்றினைத் தயாரிக்கையில் எவ்வாறு பயனுடையதாகின்றது என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ. எழுச்சியாட்சிக் கல்விக் குறிக்கோளினை அடைவதில் மாணவனின் மனப்பான்மை, விருப்பு ஆகிய நடத்தை மாற்றங்களை விளக்கி, இவற்றினை அளவிடும் முறையொன்றினை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

3. பின்வரும் அடிப்படை எண்ணக்கருக்கள், வகுப்பறைக் கற்பித்தலின் முன்னேற்பாடான நடைமுறையான பாடக்குறிப்பு ( Notes of lesson) ஒன்றினைத் தயாரிக்கையில் எவ்வாறு திட்டமிடப்படும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

   அ. விசேடகுறிக்கோள் (Specific objective)
   ஆ. தேர்ச்சி/ தேர்ச்சிமட்டம் (Competency level)
   இ. மீளவலியுறுத்தல் (Reinforcemant)
   ஈ. மதிப்பீடு (Evaluation)

   (4 x 5 = 20 புள்ளிகள்)

அ. "கட்டுரை வகை வினாக்களைவிட, அமைப்புக் கட்டுரை வினாக்கள் அதிக பயனுறுதி வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது".
இக்கூற்றினை நியாயப்படுத்துவதற்காகப் பொருத்தமான ஐந்து காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. கற்பித்தலுக்குப் பொருத்தமான வகுப்பறைக் கவின் நிலையை (Class room climate) உருவாக்குவதில் வகுப்பாசிரியரின் பங்கு எத்தகையது என்பதனை ஐந்து (05) முன்னுதாரணங்களைக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

5. அ. சிரேஸ்ட இடைநிலை வகுப்புக்களில் செயற்றிட்டமுறைக் (Project method) கற்பித்தலின் முக்கியமான ஐந்து(05) படிகளை எடுத்து விளக்கி, இதன் அனுகூலங்கள் ஐந்தினைப் பட்டியலிடுக. (10 புள்ளிகள்)

ஆ. "மாணவர்களுக்கு ஏதாவதொரு பிரச்சினையை முன்வைத்து அவற்றை அவர்களே தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களையும் வழிகாட்டல்களையும் வழங்குவதே பிரச்சினையைத் தீர்த்தல் (Problem Solving Method) கற்பித்தல் முறையாகும்." இவ்வாறான கற்பித்தல் முறையொன்றை முன்னெடுக்கையில் நீங்கள் மேற்கொள்ளவேண்டிய படிமுறைகளை முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

6. அ. வினைத்திறனான கற்பித்தல், வகுப்பறை முகாமைத்துவம் பற்றிய உமது கருத்துக்களை முன்வைத்து, மாணவர்களின் அடைவு மட்டத்தில் இவை எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. ஆசிரியர் வேலைத்திட்டம் ஒன்றைத் (Scheme of work) தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய ஐந்து (05) அம்சங்களை முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

7. அ. வினைத்திறனான வகுப்பறை முகாமைத்துவ உத்திகள் ஐந்தினை எடுத்துக் கூறி, ஆசிரியரின் நேரம் தவறாமை, அவரின் வாண்மை விருத்தியை எவ்வாறு சிறப்புடையதாக்கும் என்பது பற்றிய உமது கருத்துக்களை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

ஆ. சிறந்த வகுப்பறை முகாமைத்துவமானது ஆசிரியர்களை எவ்வாறான சிந்தனைக்கு இட்டுச் செல்கின்றது என்பதனை ஐந்து (05) உதாரணங்களின் மூலமாக விளக்குக. (10 புள்ளிகள்)

8. பின்வரும் விடயங்கள் பற்றிய உமது கருத்துக்களைச் சுருக்கமாக விளக்குக.

அ. கற்பித்தலில் விரிவுரை முறைக் கற்பித்தலின் அனுகூலங்கள்.

ஆ. பல்தர வகுப்புக் கற்பித்தலின் பிரதிகூலங்கள்.

இ. குழுமுறைக் கற்பித்தலின் நோக்கங்கள்.

ஈ. கற்பித்தல் துணைச் சாதனங்களால் கிடைக்கும் பயன்கள். (20 புள்ளிகள்)